DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 148/2023 PW : 1

Name : சுரேஷ் Age : 47

S/o : கோபால் Village :

Taluk :

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 31.08.2026

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1) 03.10.2022 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் ஆவண எண்.472/2019–ல் அடிப்படையில் பிரதிவாதி 45 சென்ட் நிலத்தில் சுவாதீனத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 45 சென்ட் நிலம் சர்வே எண்.57/2பி உள் அடங்கிய நிலம் என்றால் சரிதான். சட்ட விரோதமாக அபகரிக்க முயற்சி செய்கிறார் என்று அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரிதான். என் சொத்தை அவர் வைத்துள்ளதால் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் அதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த வித சங்கதிகளும் என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ7 ஆவணத்தில் சுமுகமாக பேசிக்கொள்ளலாம் என்று உள்ளது என்றாலும் சொத்தை பற்றி எந்த விவரமும் இல்லை என்று சொன்னால் சரிதான். என் தாத்தா பிரதிவாதிக்கு எதனால் 45 சென்ட் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அந்த ஆவணத்தை நான் பார்த்துள்ளேன். தற்போது என்னிடம காண்பிக்கப்படும் ஆவணம என் தாத்தா புருஷோத்தமன் ஆச்சாரிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தாவா சொத்தை தவிர இதர சொத்துக்களை என் தாத்தா எழுதிக்கொடுத்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் ஆளுக்கு பாதி எழுதிக்கொடுத்துள்ளதாக சொன்னால் அதில் 45 சென்ட், 45 சென்ட் என இருவருக்கு எழுதிக்கொடுத்துள்ளதாக என் தாத்தா சொன்னார். முதலில் பிரதிவாதிக்கு தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அப்போது அந்த

விவரம் எனக்கு தெரியாது பின்பு தான் எனக்கு தெரியும்.

2) பிரதிவாதிக்கு என் தாத்தா எழுதிக்கொடுத்த பத்திரத்தில் சொத்தின் 4 எல்லைகளும் குறிப்பிட்டு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு கிடைத்த சொத்தின் அடிப்படையில் நான் பட்டா மாற்றம் செய்தேன் என்றால் சரிதான். என் தாத்தா இறந்த 6 மாதம் பின்பு தான் பட்டா மாற்றம் செய்தேன். என் தாத்தா பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த விவரம் நான் பட்டா மாற்றம் செய்த போது தான் தெரியவந்தது என்றால் சரிதான். என் பெயருக்கு பட்டா மாற்றம் செய்த போது தான் நான் சொத்தை அளந்தேன். என் தாத்தா என் பெயருக்கு எழுதிக்கொடுத்த பின்பு தான் தாவா சொத்தை அளந்தேன் என்றால் சரிதான். நான் சொத்தை என் பெயருக்கு கொடுப்பதற்கு முன்பு அளந்து பார்த்து பதிவு செய்து கொள்ளவில்லை என்றால் என் தாத்தா கொடுத்தார் நான் அதை பெற்றுக்கொண்டேன். நான் பததிர் பதிவு செய்தவற்கு முன்பே அளந்திருந்தால் அங்கு 9 சென்ட் மீதம் உள்ள விவரம் தெரிந்திருக்கும் என்று சொன்னால் அவ்வாறு நான் எந்தவித சொததையும் அளக்காமல் வயதான என் தாத்தாவை அழைத்து சென்று பத்திரம் பதிவு செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்து பட்டா நான் வி.ஏ.மூ–ம் பெற்றேன் என்றால் சரிதான். தாவா சொத்தை அளப்பதற்கு ரசீதை வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன், அதை அவர் தாக்கல் செய்துள்ளரா என்ற விவரம் எனக்கு தெரியாது. இருந்தால் அதை தாக்கல் செய்ய தயராக உள்ளேன். சொத்தை பொதுவாக அளக்கும் போது பக்கத்தில் உள்ளவர்களுக்கும் சொல்லி தான் அளப்பார்கள் என்றால் சரிதான். சொத்தை அளப்பதற்கு சர்வேயர் கொடுத்த intimation letter நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் எந்த வித ஆவணததை தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் பெயரில் sub division ஆகவிட்டது என்பதற்கு நான் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. தாவா தாக்கல் செய்த சொத்து விவசாய பூமி என்றால் சரிதான். அதை உறுதி செய்வதற்கு எதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளளேனா என்றால் தெரியவில்லை. பட்டா

வி.ஏ.ஓ தான் வழங்கினார் என்றால் சரிதான். தாவா சொத்து பிரதிவாதி வசம் உள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். அவரிடம் உள்ளது என்பதற்கு பத்திரம் மட்டும் தாக்கல் செய்துள்ளேன்.

3) தாவா சொத்து 90 சென்ட் என்றால் சரிதான். அதில் 36 சென்ட் நாகம்மாள் என்பவருக்கு என் தாத்தா கிரையம் கொடுத்துவிட்டார் என்றாலும், மீதும் உள்ள 45 சென்ட் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றாலும் ஆக மொத்தம் அதில் 9 சென்ட் நிலம் மட்டும் வாதிக்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. 9 சென்ட் தான் நிலம் உள்ளது என்றால் அதை தெரியாமல் வயதான என் தாத்தாவை அழைத்து சென்று பத்திரம் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பதற்கு நான் எந்த வித ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. நான் அந்த இடத்தை முறையாக அளவீடு செய்யாமல் வி.ஏ.ஓ.விடம் பணம் கொடுத்து பட்டா பெற்றேன் என்றால் சரியல்ல. நான் முறையாக சர்வே செய்திருந்தால் சர்வே Department யாரிடம் நிலம் உள்ளது என சொல்லியிருப்பார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பதற்கு ஆதராம் தாக்கல் செய்யாததால் நான் சுவாதீனம் கோரும் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையை நான் தெரிந்து கொண்டேன். பதிலுரையில் 36 சென்ட் நாகம்மாளுக்கு கிரையம் போது மீதம் 9 சென்ட் நிலம் உள்ளது என சொல்லியுள்ளார் என்றால் அது தவறு. பிரதிவாதி தனக்கு கொடுக்கப்பட்ட 4 எல்லைகளை குறிப்பிட்ட சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் தான் சரிவர அளவீடாமல் நான் கோரும் பரிகாரம் நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S/d.S.Tasneem
I Additional District & Sessions Judge,
Tiruvallur.